**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-2 | Date | : 24.09.2024 |
| Case No. | : **O.S. 118/2020** | Nationality | : Indian |
| Name | : ராகவன் | Religion | : |
| Father's/Husband's Name | : கோவிந்தராஜ் | Age | : 51 |
| Village | : | | |
| Taluk | : | | |

வா.சா.2

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நிரூபண வாக்குமூலத்திற்கு யார் விவரம் கூறியது என்றால் நான்தான் கூறினேன். எப்போது விவரம் கூறினேன் என்றால் தேதி ஞாபகமில்லை, சுமாராக 1 மாதம் இருக்கும். இந்நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கோமதி பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கினை நான் 3 சொத்துகளுக்காக போட்டுள்ளேன். குறிப்பாக பிரம்பாயி அம்மன் கோவில் சம்மந்தமாக சொத்து ஒன்றை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே கோவில் சொத்து தொடர்பாக நடேச பத்தரின் மருமகள் லெட்சுமி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண் மற்றும் விஸ்தீரணத்தை நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்து விவரத்தை எந்த ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் என்னிடம் உள்ள ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். அது எந்த ஆவணம் என்று சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. வாதிக்கு மேற்படி சொத்து எவ்வாறு வந்தது என்று தெரியுமா என்றால் வாதியின் மாமியாரிடமிருந்து அவருக்கு

கிடைத்தது. நான் அதற்கான ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நான்கெல்லையை எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் எனது ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். வாதியின் ஆவணத்தை எதுவும் பார்த்தேனா என்றால் இல்லை. நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைக்கு உட்பட்ட அளவுகள் தெரியுமா என்றால் தெரியவில்லை.

2. வாதியின் மாமியார் காசியம்மாளுக்கு எவ்வாறு சொத்து கிடைத்தது என்று தெரியுமா என்றால் சரஸ்வதி என்பவர் அவருக்கு விற்பனை செய்துள்ளார். அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் தற்போது ஞாபகமில்லை. காசியம்மாளுக்கு என்ன அளவுள்ள சொத்து கிடைத்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல 12 செண்ட் அளவுள்ள சொத்து கிடைத்தது. சரஸ்வதி அம்மாள் விலைக்கு வாங்கிய சொத்தைதான் காசியம்மாளுக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்று ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தெரியும். அது என்ன ஆவணம் என்று தெரியுமா என்றால் தெரியாது.

3. எனது நிரூபண வாக்குமூலத்தில் சரஸ்வதி அம்மாள் அவருக்கு கிடைத்த பாகத்தை விற்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சரஸ்வதி அம்மாள் நீதிமன்ற விற்பனை மூலமாக வாங்கிய சொத்தில் பாதியை காசியம்மாளுக்கு விற்பனை செய்துள்ளார் என்றாலும் அதனை மறைத்து சரோஜா வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. கோமதி அம்மாள் சரஸ்வதிக்கு என்ன உறவு முறை என்றால் பேத்தி ஆவார். பாதி சொத்து கோமதி அம்மாளின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது என்றாலும் நான் வாதியுடன் சேர்ந்து கொண்டு முதல்

விசாரணையில் பொய்யாக சொல்லி உள்ளேன் என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2024.09.25 10:25:45 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.